IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF,
THIRUMANGALAM.
O.S.No. 453/2008
DEPOSITION OF WITNESS

பி.வா.சா. 1சாட்சி மருதன்    த.பெ.ஆறுமுகம்

**Solemnly affirmed and sworn by Thiru.E.Manikandan, B.A.,B.L, Principal District Munsif (FAC) on 18.02.2026 in accordance with the provisions of Act XX141.**

OS.No. 489/2008 வழக்கின் 8 முதல் 11 வரையான தரப்பில் குறுக்கு விசாரணை :

1. நான் என்ன வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் பாக பிரிவினை வழக்கு தாக்கல் செய்துள்ளேன். கருப்பன் சாமான் என்னுடைய தாத்தா என்றால் சரிதான். கருப்பன் சாமானுக்கு முத்தன், ஆண்டி, ஆறுமுகம் ஆகியோர்கள் வாரிசுகள் என்றால் சரிதான். மேற்படி முத்தனுக்கு 1 பெண், 1 ஆண் என்றால் பஞ்சம்மாள், சின்னம்மாள் ஆகியோர் வாரிசுகள். மேற்படி நபர்கள் 1 மற்றும் 13 வாதிகள் என்றால் சரிதான். சின்ன மருதுவின் மனைவி தனம் என்றால் சரிதான். மேற்படி தனம்தான் 6ம் வாதி என்றால் சரிதான்.

2. அவர்களின் பிள்ளைகள்தான் ரவிக்குமார், மகாலெட்சுமி என்றால் சரிதான். மேற்படி நபர்கள்தான் முத்தனின் வாரிசுகள் என்றால் சரிதான். இவர்களை தவிர வேறு வாரிசுகள் இல்லை என்றால் சரிதான். ஆண்டிக்கு மருதன், பஞ்சம்மாள், கட்டிபிள்ளை, தர்மர் மற்றும் போதும்பொன்னு ஆகியோர்கள் வாரிசுகள் என்றால் சரிதான். மேற்படி நபர்கள் 2, 3, 5, 6 பிரதிவாதிகளாக உள்ளனர் என்றால் சரிதான். மேற்படி நபர்களின் தர்மர் இறந்துவிட்டார் என்றால் சரிதான். அவருடைய மனைவிதான் ஒய்யம்மாள் என்றால் சரிதான். மேற்படி நபர்தான் 8ம் பிரதிவாதி என்றால் சரிதான். மேற்படி நபருக்கு செல்வம், பாண்டி, தர்மர் ஆகியோர்கள் வாரிசுகள் என்றால் சரிதான். அவர்கள் 9, 10, 11 பிரதிவாதிகளாக சேர்க்கப்பட்டுள்ளனர்

என்றால் சரிதான். இவர்களை தவிர வேறு வாரிசுகள் இல்லை என்றால் சரிதான்.

3. பஞ்சம்மாள் இறந்துவிட்டார் என்றால் சரிதான். பஞ்சம்மாளுக்கு சக்திவேல், சகுந்தலா ஆகியோர்கள் வாரிசுகள் என்றால் சரிதான். மேற்படி நபர்கள்தான் ஆண்டியின் வாரிசுகள் என்றால் சரிதான். பஞ்சம்மாளை மருதி என்றும் அழைப்பார்கள் என்றால் சரிதான். மேற்படி நபரைதான் 5ம் பிரதிவாதியாக சேர்த்துள்ளேன் என்றால் சரிதான். போதுபொன்னு என்பவரை இருளாயி என்றும் அழைப்பார்கள் என்றால் சரிதான். அவரை 7ம் பிரதிவாதியாக சேர்த்துள்ளேன் என்றால் சரிதான்.

4. மேற்படி நபர்களின் பெயரை 8 முதல் 11 பிரதிவாதிகள் தன்னுடைய எதிர்வழக்குரையில் குறிப்பிட்டுள்ள விபரத்தை நான் கேட்டு தெரிந்துகொண்டேன் என்றால் சரிதான். ஆறுமுகத்தின் மனைவியின் பெயர் ராக்கம்மாள் என்றால் சரிதான். மேற்படி நபர் 5ம் வாதி என்றால் சரிதான். ராக்கம்மாள், ஆறுமுகத்திற்கு பிறந்த மகன் நான் என்றால் சரிதான். என்னுடன் பிறந்தவர்கள் முருகன், கருப்பையா, ஆறுமுகம், தங்கத்தாய், பரமேஷ்வரி ஆகியோர் என்றால் சரிதான். மேற்படி நபர்களில் ஆறுமுகம் என்பவர் இறந்துவிட்டார் என்றாலும் திருமணம் எதுவும் செய்யாமல் இறந்துவிட்டார். என்னுடன் பிறந்த ஆதிலெட்சுமி என்பவர் இறந்துவிட்டார் என்றால் சரிதான்.

5. ஆதிலெட்சுமியின் பிள்ளைகள் பாண்டியம்மாள், ஆண்டிசாமி என்றால் சரிதான். மேற்படி நபர்கள்தான் கருப்பன் சாமானுக்கு வாரிசுகள் என்றால் சரிதான். கருப்பன் சாமானுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களில் அவருடைய 3 பிள்ளைகளுக்கு பாத்தியப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆண்டியின் பங்கில் தர்மருக்கு பங்கு உள்ளது என்றால் சரிதான். தர்மர் இறந்துவிட்டதால் அவருடைய பங்கு அவரின் அப்பாவுக்கு சேரவேண்டிய

பங்கினை அவரது மக்களுக்கு கொடுப்பதில் எனக்கு எந்தவித ஆட்சேபணையும் இல்லை என்றால் சரிதான்.

6. மேற்படிய வழக்கின் அவர்களுக்கு சேரவேண்டிய பங்கினை பிரித்துக்கொடுப்பதில் எனக்கு எந்தவித ஆட்சேபணையும் இல்லை என்றால் சரிதான். எங்களுக்கு 2 பங்கு அவர்களுக்கு 1 பங்கு என்றால் சரிதான். நான் வழக்கில் சொல்லியவாறு நான் பாகம் பிரித்துதரவேண்டி பிரதிவாதிகளை அனுகியபோது அவர்கள் பிரித்துதர மறுத்துவிட்டதாக கூறியுள்ளேன் அதனால் தாவா வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றும் மேற்படி விபரம் தவறு என்றால் சரியல்ல.

7. அவர்களும் மேற்படி பாகத்தை பிரித்துக்கொள்வதற்கு தயாராக உள்ளனர் என்றால் எனக்கு தெரியாது. நான் கேட்டுக்கொண்ட பரிகாரப்படி 8 முதல் 11 பிரதிவாதிகளும் பெற தகுதியுள்ளவர்கள் என்றால் சரிதான்.

**மறுவிசாரணை: இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை
தட்டச்சு செய்து அவருக்கு படித்துக்காட்டி
அவர் சரியென்று ஒப்புக்கொண்டு இதில்
கையொப்பமிட்டார்.

ESWARAN MANIKANDAN

Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2026.02.18 10:01:45 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (FAC),
திருமங்கலம்.